தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 049/ந/2023
நாள் 21.03.2023

திரு.கே.கோவிந்தன்,
உளுந்தூர்பேட்டை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
உளுந்தூர்பேட்டை நகராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை, உளுந்தூர் காலனி என்ற முகவரியில் வசிக்கும் திரு.கே.கோவிந்தன் என்பவரின் 11.02.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.02.2023 அன்று பெறப்பட்டு 049/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை, உளுந்தூர் காலனி என்ற முகவரியில் வசிக்கும் திரு.கே.கோவிந்தன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"உளுந்தூர்பேட்டை சில ஆண்டுகளுக்கு முன்புதான் பேரூராட்சியாக இருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்பு அது பட்டியல் இன தலைவர் என இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆதலால் உளுந்தூர்பேட்டை பேரூராட்சியாக இருந்த போது செயல்பட்ட பேரூராட்சி அலுவலகக் கட்டடத்தை நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத் தலைவரின் ஆணைப்படி அந்த அலுவலகத்தை இடித்துள்ளனர். தற்போது உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. நகராட்சியில் தூய்மை பணியாளர்களாக மாற்றுத்திறனாளிகள் உட்பட 150–க்கு மேற்பட்ட நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அந்த 150 நபர்கள் அனைவருமே ஆதிதிராவிட வகுப்பு சேர்ந்தவர்கள், குறிப்பாக நான் வாழக்கூடிய உளுந்தூர் காலனியை சேர்ந்த மக்கள்தான் அதிகம். ஆதலால் சென்ற மாதம் நடைபெற்ற நகர சபை கூட்டத்தில் உளுந்தூர்பேட்டை

நகர்மன்ற தலைவரும், நகரமன்ற துணைத்தலைவரும் அடாவடித்தனமாக உளுந்தூர்பேட்டை நகர்மன்ற அலுவலகம் கட்டுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளனர். அதாவது நகர்மன்ற அலுவலகம் தற்போது செயல்பட்டு வரும் அலுவலக இடத்திலிருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரத் தொலைவில் கட்டுவதற்கான பூமி பூஜை போட்டு இடம் தேர்வு செய்து உள்ளனர். நகரமன்ற துணைத்தலைவர் சுயநலத்துக்காக புதிய நகராட்சி அலுவலகத்திற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நகராட்சியில் பணிபுரியும் உளுந்தூர் காலனியில் வசிக்கும் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த மக்கள் அதிகாலை 4.30 மணிக்கு பணிக்கு செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. அதுவும் 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று அங்குள்ள வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டு மீண்டும் உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு வந்து பணிபுரிய வேண்டும். உளுந்தூர்பேட்டை நகராட்சியை நம்பிதான் உளுந்தூர் காலனி தூய்மைப் பணியாளர்கள் வாழ்வாதாரம் உள்ளது. காலனி மக்கள் மீது உள்ள கோபத்தினால் உளுந்தூர்பேட்டை நகர்மன்ற தலைவரும், துணைத்தலைவரும் அநியாயம் செய்து, காலனி மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்க நினைக்கும் இவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்தும், உளுந்தூர்பேட்டை நகர்மன்ற அலுவலகத்தை தூய்மைப் பணியாளர்கள் பணிபுரியும் இடத்திற்கு சிறிது தூரம் அதாவது உளுந்தூர்பேட்டை தமிழ்நாடு ஓட்டலுக்கு எதிர்ப்புறம் உள்ள அரசுக்கு சொந்தமான மூன்று ஏக்கருக்கு அதிகமான இடம் உள்ளது, அந்த இடத்தில் நகர்மன்ற அலுவலகம் கட்டுவதற்கான ஏற்பாடு செய்யுமாறும், உளுந்தூர்பேட்டை பொதுமக்களிடம் கருத்துக் கணிப்பு கேட்டு தூய்மைப் பணியாளர்களாகப் பணிபுரியும் மக்கள் சிரமமின்றி பணிக்குச் செல்ல வழிவகை செய்து உளுந்தூர்பேட்டை வாழ் பொதுமக்கள் மற்றும் ஆதிதிராவிட மக்களின் வாழ்வாதாரத்தை காக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் " என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் உளுந்தூர்பேட்டை, நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையாளர் தனது 10.03.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

உளுந்தூர்பேட்டை பேரூராட்சியானது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 01.11.2021 முதல் நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. உளுந்தூர்பேட்டை பேரூராட்சி அலுவலக கட்டடமானது 31 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதாலும், கட்டட மேல் கூரையில் நீர் கசிவு ஏற்படுவதாலும் மற்றும் பேரூராட்சி பணியாளர்களுக்கு போதுமான இட வசதி இல்லாத காரணங்களாலும் பேரூராட்சி அலுவலகத்தை இடித்து புதிய அலுவலகம் கட்ட அப்போதைய பேரூராட்சி மன்றத்தினால் 15.02.2019 அன்று அனுமதி அளிக்கப்பட்டு பேரூராட்சியாக இருந்த போதே இடிக்கப்பட்டு, பேரூராட்சி அலுவலகக் மாற்று இடத்தில் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகக் கட்டடத்தில், ஜீலை 2020 முதல் இயங்கி வருகிறது. நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்பு தற்போதைய நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர் மூலமாக அக்கட்டடங்கள் இடிக்கப்படவில்லை.

நகராட்சி நிர்வாக இயக்குநரின் 10.04.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் பேரூராட்சியிலிருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு புதியதாக நகராட்சி அலுவலகக் கட்டடம் அமைத்திட விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க கோரப்பட்டது. எனவே, ரூ 3.50 கோடி மதிப்பீட்டில் சேலம் பிரதான சாலையில் சர்வே எண். 267/1A இடத்தில் புதிய அலுவலகம் அமைத்திட 26.04.2022 அன்று நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு (Detailer Project Report) DPR அனுப்பப்பட்டு, 08.06.2022 அன்று இயக்குநரின் அனுமதி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து பணிகள் துவங்க இருந்த நிலையில் 24.08.2022 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோரால் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்விடத்திற்கு அருகில் பாதாள சாக்கடை திட்ட சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைந்துள்ளதாலும் அருகில் மயானம் அமைந்துள்ளதாலும் வேறு இடத்தினை தேர்வு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில் மூன்று வெவ்வேறு இடங்களில் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர் , வட்டாட்சியர், நகர்மன்ற தலைவர், துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் ஆகியோர்களால் ஆய்வு செய்யப்பட்டு அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு அருகில் உள்ள இடத்தினை மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய்த்துறையால் தேர்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் உளுந்தூர்பேட்டை சர்வே எண்.45/1-ல் 3 ஏக்கர் அளவில் அலுவலகக் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து அலுவலகக் கட்டிடம் கட்டும் பணியினை துவங்கிட ஏதுவாக முன் நுழைவு அனுமதி (Enter-up-on) வழங்கிட வேண்டி கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 17.11.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவரின் 03.02.2023 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் உளுந்தூர்பேட்டை வட்டம், உ.கீரனூர் கிராமம் புல எண்.–271–ல் 1.44.50 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலத்தில் 0.60.70 ஹெக்டேர் நிலத்தினை உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகம் அமைக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு அரசு ஆணை எண்.503, LD 4(1) வருவாய்துறை நாள்.21.09.1999–ன்படி நில மதிப்பின்றியும், வருவாய் நிலை ஆணை எண்.23–ன் கீழ் நில மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படி, உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகம் கட்டுவதற்கான பூமி பூஜை 10.02.2023 அன்று நடத்தப்பட்டு, கட்டடப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும் புதிய நகராட்சி அலுவலகம் கட்டப்படும் பகுதி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இவ்விடத்தின் அருகிலேயே அரசு தொழிற்பயிற்சி (50 மீட்டர்) நிலையம், எதிர்புறம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி (50 மீட்டர்), நீதிமன்ற வளாகம் (100 மீட்டர்), மகளிர் காவல் நிலையம் 100 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தற்போதைய பேருந்து நிலையத்தில் இருந்து 600 மீ தொலைவில் உள்ளது. மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு 4 கி.மீ. தொலைவில் உள்ளது என்ற தகவலில் உண்மை இல்லை

என்பதை மாண்பமை நடுவர் மன்றத்தின் முன் பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையரும் 14.03.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.03.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.கே.கோவிந்தன், 14.03.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இட வசதி காரணமாக ஏற்கனவே இருந்த நகராட்சி கட்டடத்தை இடித்துவிட்டு சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இடத்தில் கட்டுவதற்கு பூமிபூஜை போட்டு கட்டடப் பணியை ஆரம்பிக்க உள்ளனர். உளுந்தூர்பேட்டை நகராட்சி நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகியோர் தங்களின் விருப்பத்திற்கேற்ப தீர்மானம் நிறைவேற்றி கட்டடம் கட்டவுள்ளனர். இதனால், நகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட மேற்கண்ட 4 கிலோ மீட்டர் தூரம் சென்று கையொப்பமிட வேண்டியுள்ளதால், பணியாளர்களின் வசதியை முன்னிட்டு தற்போதுள்ள நகராட்சி கட்டடத்திற்கு எதிரே உள்ள அரசுக்கு சொந்தமான 3 ஏக்கர் உள்ள இடத்தில் நகராட்சி கட்டடம் கட்ட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையாளர் 14.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் அமைந்துள்ள தற்போதைய நகராட்சிக் கட்டடம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முந்தைய கட்டடம் ஆகும். போதுமான இடவசதி இல்லாததாலும், கூரையில் நீர் கசிவதாலும் நகராட்சி அலுவலகத்தை மாற்றிட மாற்று இடம் தேடப்பட்டது. முதலில் உளுந்தூர்பேட்டை நகராட்சியில் குப்பை கிடங்காக இருந்த இடம் தெரிவு செய்யப்பட்டது. ஆனால் அங்கு சுமார் 15 அடி ஆழத்திற்கு குப்பைகள் தேங்கியுள்ளதால் அவ்விடத்தை தேர்வு செய்யவில்லை. மேலும், சேலம் பிரதான சாலையில் சர்வே எண் 267.1எ இடத்தில் புதிய அலுவலகம் அமைத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், மேற்கண்ட இடத்திற்கு அருகில் பாதாள சாக்கடை திட்ட சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளதால், மேற்கண்ட இடத்தை மாற்றி வேறு இடத்தை தேர்வு செய்ய மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததன் அடிப்படையில், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் உள்ள அரசு புறம்போக்கு நிலமான சுமார் 11/2 ஏக்கர் நிலம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ஆணை நாள் 3.2.2023–ன்படி பெறப்பட்டு மேற்கண்ட இடத்தில் கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மனுதாரர் தற்போதுள்ள நகராட்சி கட்டடத்தை தமிழ்நாடு ஓட்டல் எதிரில் கட்டவேண்டும் என தெரிவித்துள்ள இடம் நீர்நிலைப் புறம்போக்கு இடமாகும். எனவே, மேற்கண்ட இடத்தில் மனுதாரர் கோரியவாறு புதிய நகராட்சி கட்டடம் கட்ட இயலாது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையைச் சேர்ந்த மனுதாரர் திரு.கே.கோவிந்தன் என்பவர் தனது 11.02.2023 நாளிட்ட மனுவில் உளுந்தூர்பேட்டை பேரூராட்சியானது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதனை தொடர்ந்து பேரூராட்சி கட்டடம் இடிக்கப்பட்டு, நகராட்சியின் நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவரின் சுயநலம் காரணமாக, உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கான புதிய கட்டடத்தை 4 கி.மீ. தூரத்தில் கட்ட தீர்மானம் நிறைவேற்றியுள்ளதன் மூலம் 150 தூய்மைப் பணியாளர்கள் வருகைப் பதிவேட்டில் பதிவு செய்ய 4 கி.மீ தூரத்திற்கு சென்று மீண்டும் நகராட்சி பகுதிக்கு வந்து பணிபுரிய சிரமம் ஏற்படும் என்பதால், உளுந்தூர்பேட்டை தமிழ்நாடு ஓட்டல் எதிர்புறம் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

உளுந்தூர்பேட்டை பேரூராட்சி அலுவலகம் அரசுக்கு சொந்தமான இடத்தில் 1988 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்த நிலையில், கட்டடத்தின் கூரை மற்றும் சுவர்களில் நீர்கசிவு ஏற்பட்டதாலும், பழுதினை சீர் செய்து பராமரிக்க முடியாத நிலையிலும் மற்றும் பணியாளர்களுக்கு இடவசதியின்மையாலும், பேரூராட்சி நகர்மன்ற தீர்மானத்தின்படி பழுதடைந்த கட்டடம் இடிக்கப்பட்டு, பேரூராட்சிக்கு சொந்தமான வணிகவளாகத்தில் தற்காலிகமாக அலுவலகம் செயல்பட்டு வந்துள்ளது.

இதற்கிடையில் இப்பேரூராட்சியானது அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 01.11.2021–ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி உளுந்தூர்பேட்டை பேரூராட்சியானது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநரின் 08.06.2022 நாளிட்ட செயல்முறைகள் ஆணையில் உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு புதிய அலுவலகத்தை ரூ 3.50 கோடி மதிப்பீட்டில் கட்ட, நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்காணும் செயல்முறைகள் ஆணையின்படி நகராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்ட, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர் ஆகியோர் அரசுக்கு சொந்தமான மூன்று வெவ்வேறு இடங்களை ஆய்வு செய்ததில், இறுதியாக உளுந்தூர்பேட்டை வட்டம், உ.கீரனூர் கிராமம், புல எண்.271–ல் 0.60.70 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலத்தில் புதிய உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகம் அமைக்க கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவரின் 03.02.2023 நாளிட்ட செயல்முறைகள் ஆணையின் மூலம் நகராட்சிக்கு நிலமாற்றம் செய்து ஆணையிட்டதன் மூலம் அலுவலகக் கட்டடம் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்காணும் மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆய்வின் அடிப்படையில் புதிய நகராட்சி அலுவலக கட்டடம் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிப்பது போல் நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவரின் சுயவிருப்பத்தின் பேரில் கட்டடப்

பணிகள் நடைபெறவில்லை என்பது ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. மேலும் புதிய அலுவலகம் அமைய இருக்கும் இடமானது நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. அதாவது கட்டடம் கட்டப்படும் இடத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் அரசு தொழிற்பயிற்சியும், எதிர்புறம் 50 மீட்டர் தொலைவில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியும், 100 மீட்டர் தொலைவில் நீதிமன்ற வளாகமும் மற்றும் மகளிர் காவல்நிலையமும் மற்றும் 600 மீட்டர் தொலைவில் பேருந்து நிலையமும் அமைந்துள்ளதால் மனுதாரர் தெரிவிப்பது போல் 4 கி.மீ தொலைவில் அமையப்படவில்லை என்பது ஆணையரின் அறிக்கை வாயிலாக தெரியவருகிறது. இது தவிர மனுதாரர் புதிய கட்டடத்தை தமிழ்நாடு ஓட்டல் எதிரில் உள்ள இடத்தில் கட்டப்பட வேண்டும் எனக் கோரும் இடமானது, நீர்நிலை புறம்போக்கு இடமாக அமைந்துள்ளதால் அங்கு அலுவலக கட்டடம் கட்டுவதற்கு வழிவகையில்லை.

எனவே, மனுதாரர் சமர்ப்பித்துள்ள மனுவில் உள்ள புகார்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ள எவ்வித முகாந்திரமும் இல்லாத காரணத்தினால், உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.கே.கோவிந்தன்,
உளுந்தூர் காலனி, உளுந்தூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

2) ஆணையாளர், உளுந்தூர்பேட்டை நகராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம் – 606 107.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23/3/23

செயலாளர்

22/03/23